# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

# 1983 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

*[1983, ஜூன் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1983, ஜூன் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**தபாற் செலவு : சதம் 50**

**விலை : சதம் 35**

# 1983 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

[1983, ஜூன் மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 32/83

1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

**இலங்கை தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அத்தகைய துறைகளை" என்ற சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய துறைகளை அல்லது முகவர் நிலையங்களை" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பதாம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(அ) "இ என்னும் அட்டவணையில்" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக "இ என்னும் அட்டவணையில் அல்லது ஈ என்னும் அட்டவணையில்" என்ற சொல்லமைப்புக்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(ஆ) "வலயமொவ்வொன்றிலும் பயனுறுதல் வேண்டும்." என்ற சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் :—

"வலயமொவ்வொன்றிலும் பயனுறுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் சபையுடனான கலந்தாலோசனையுடனும் அதன் ஒருப்பாட்டுடனும் அன்றி, துணைவிதி, ஒழுங்குவிதி, கட்டளை அல்லது அறிவிப்பு எதுவும் ஆணைக்குழுவினால் அச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படுதலோ அல்லது விடுக்கப்படுதலோ அல்லது ஏதேனும் தத்துவம் அல்லது பணி ஆணைக்குழுவினால் அச்சட்டத்தின்கீழ் பிரயோகிக்கப்படுதலோ அல்லது நிறைவேற்றப்படுதலோ ஆகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஐந்து ஆண்டுக்காலத்தினுள்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "மூன்று ஆண்டுக்காலத்தினுள்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

2—எ 70433—3,100 (83/05)

முதன்மைச் சட்டவாக்கத்தில் ஈ என்னும் புதிய அட்டவணையைச் சேர்த்தல்.

5. அட்டவணை இ என்பதை உடனடுத்துப் பின்னர், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை ஈ எனப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய அட்டவணையைச் சேர்ப்பதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கமானது இத்தால் திருத்தப்படுகின்றது :—

" அட்டவணை ஈ (பிரிவு 20)

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப்பிரயாண அபிவிருத்திச் சட்டம்

1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்டல், அபிவிருத்தி செய்தற் கூட்டுத்தாபனச் சட்டம்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்

1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணற் சட்டம்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம்.",

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காக சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.